# ஒரு விழிப்பம்



அருட்தந்தை

## மரியாம்பிள்ளை ததேயூஸ் சறத்ஜீவன்

✸ 13.05.1968 + 18.05.2009

இறையாட்சியை நம்புகிறவர்கள் ஒடுக்கப்படுவோரின்
விடுதலைக்காகப் போராடாமல் இருக்கமுடியாது – ஜி குடியெறெஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு விழுப்பம்

# Oru Vilupam

(Vilupam: All codes extol the excellence
of disciplined self-denial)

*A*

*Tribute*

*to the Heroic Life and Powerful Witnessing of Father Mariampillai Thatheus Sarathjeevan who Crowned his Minsitry with Sacrificial Offering of his Love and Service on May 18, 2009 at one of the worst Human Ttragedies of the Century at Wanni*

A PUBLICATION BY
PRIEST - FRIENDS AND CO-WORKERS AT WANNI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகப்புவரிகள்

தனது அற்புதமான மக்கள் மையப் பணியில் முன்உதாரணமாகி மிகக் கொடூரமான சூழலில் எம்மை விட்டு சடுதியாகப்பிரிந்த குருத்தோழன் சரத் ஜீவனுடைய அகண்ட ஆழுமையை சில பக்கங்களில் புகுத்தியுள்ளோம்.

வரலாறு காணாத வன்னிப்பேரவலத்தின் ஒரு குறியீடாக தந்தை விளங்கு கிறார். அவருடைய பிரிவின் பின்புலத்தை ஆவணப்படுத்த எண்ணி இக்குறு நூலை வெளியிடுகின்றோம். அவரிடம் இருந்தவர்களிடம் அறிய முயற்சி எடுத்தபொழுது இக்கொடூர நினைவுகளை மீட்டுக்கொண்டு மீண்டும் துன்பியல் அனுபவத்திற்கு செல்ல அவர்கள் விரும்பவில்லை. இருப்பினும் அவருடன் பயணித்த அருட்பணி ஜேம்ஸ்பத்திநாதர் பல தரவுகளை தந்துதவியுள்ளார்.

இது ஒரு கண்ணீர் அஞ்சலிமலர் அல்ல. உறுதிகொண்ட இலட்சியத்துக் காக ஆவிபிரியும்வரை வீர சாட்சியத்துடன் போராடியவரின் ஒரு விழுப்பம். திருஅவையின் நீதி சமூகப்படிப்பினைகள் நூல் வடிவில் இருந்தால் மட்டும் போதாது அதற்கு உயிர் ஊட்டம் கொடுக்கின்ற மனிதர்கள் தேவை. அவர்கள் வரலாற்றுச்சூழலில் வாழ்கிறவர்கள்.

இவரின் உருவாக்கத்திற்கு சிறந்த அடித்தளமாகவும் பலன்கொடுக்கும் விளைநிலமாகவுமிருந்து பணிபுரிய எப்பொழுதும் உற்சாகப்படுத்திய பெற்றோர் கள், சகோதரர்களுக்கு பாராட்டுகளை தெரிவிப்பதில் நிறைவடைகிறோம்.

ஒரு விழுப்பம்

உலகப்பற்றை நீத்தவர் செய்யும் பெருமைக்குரிய செயல்களை விழுப்பம் என்று அறநூல்கள் கூறுகிறது. வள்ளுவம் அதை விழுப்பத்தில் விழுப்பம் என்கிறது.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் - பனுவல துணிவு."

வீரத்தின் அடையாளமாகப் போரில் பெற்ற காயத்தை விழுப்புண் என்பர். இவ்விரு கருத்து உள்ளீடு அடிகளாருக்கு பொருந்துவதால் விழுப்பம் என்று பெயர் மலருக்கு அணிந்துள்ளோம்! ஆக்கங்கள் தந்துதவிய அனைவருக்கும் பாராட்டுக்கள்!

*குருத்தோழர்கள்.*

17.06.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்பா, சூரிய ஜீவன், நித்திலா, நிலா, அம்மா
சரத்ஜீவன், சக்திஜீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பேரால பங்கின் உன்னத கொடை

அருட்பணி மரியாம்பிள்ளை சரத்ஜீவன் யாழ் பேராலய பங்கின் மகன், தனது குருத்துவத்தின் குறுகிய காலத்திலே இறைவனடி சேர்ந்து விட்டாரென்ற கவலை எம்மை இன்றும் வாட்டிக்கொண்டிருக்கிறது.

"நல்ல ஆயன் தன் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாக பெறும் பொருட்டு வந்துள்ளேன்" என்ற இயேசுவின் கூற்றுக்கிணங்க கொடூரமான போரின் மத்தியிலே இறுதிவரை பணியாற்ற வேண்டுமென அர்ப்பணத்தோடு வாழ்ந்தார். வரலாற்றிலே புனித மாக்சிமிலியன் கோல்பே என்ற குரு போர்லந்து நாட்டை சேர்ந்தவர். சித்திரைவதை முகாமிற்குள் ஒரு கைதியின் உயிரை காப்பாற்ற தன் உயிரைக்கொடுத்தார்.

பேராயர் ஆஸ்கார் ரோமேரோ தென்அமெரிக்காவில் எலசல்லடோர் நாட்டின் பேராயர் ஏழைகளின் விடுதலைக்காக போராடி திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போது சுட்டுக்கொல்லப்பட்டார். மறைபோதக நாடுகளில் பணியாற்றிய பல குருக்கள் சித்திரைவதை செய்யப்பட்டும், சிறையில் அடைபட்டும், கொலை செய்யப்பட்டும் உள்ளனர். எம்மண்ணிலும் இவ்வாறு இறந்தவர்கள் உண்டு. அவ்வரிசையிலே அருட்பணி சரத்ஜீவனும் அடங்குவார்.

இவர் மக்களின் நலனுக்காக போர்ச்சூழலில் உறவையும், உணவையும் பகிர்ந்து அவர்களுக்கு ஆன்மீக ஊட்டத்தை வழங்கி மரித்தவரை அடக்கம் செய்து, மனம் உடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறி நம்பிக்கையூட்டி நற்பணியாற்றி அம்மண்ணிலே சங்கமமானார்.

"உமது மக்களுக்காக பணிசெய்ய நான் காத்திருக்கின்றேன்" என்ற புனித மாட்டீனின் கூற்றுக்கு அமைய அருட்தந்தை சரத்ஜீவன் இறுதிவரை வன்னி மண்ணிலே மக்களோடு இருந்து பணியாற்றி எதிர்பாராத விதமாக இறைவனால் அழைத்துக் கொள்ளப்பட்டார். நான் பேராலயத்தில் (1979-80 களில்) உதவித்தந்தையாக பணியாற்றிய போது பீடப்பணியாளராக இவரை அறிகிறேன். குடும்பத்தில், விசுவாசத்திலே ஆழமும் , மறைபணியிலே வாஞ்சையையும் பார்த்திருக்கிறேன். அத்தகைய குடும்பத்திலே உருவான குருவும் தோற்றத்திலே பெரிய உருவமாக காட்சியளித்தாலும் எளிமையும், அமைதியும், அர்ப்பணமும், சேவைசெய்யும் மனப்பாங்கும் அவரின் குருத்துவத்திற்கு மெருகூட்டின.

"கோதுமை மணி மடிந்தாலொழிய அது அப்படியே இருக்கும்." என்ற வேதவாக்குக்கேற்ப இன்று எம்மை குருத்துவ வாழ்வில் அதிகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிக்கவும், துன்பங்கள், அவலங்கள் கண்டு துவண்டு விடாமல் துணிவோடு பணியாற்ற அருட்தந்தையின் வாழ்வு தூண்டுதல் தர வேண்டும். இப்போரவல வடுக்களால் காயமடைந்து, மனமுடைந்து, உறவிழந்து, ஊனமுற்று வாழும் எம்மக்களுக்கு இறைவனின் தொடுகையை உணர்த்தும் வல்ல கருவிகளாக வாழ நம்மை அழைத்து நிற்கின்றது. முகாம்களிலே முடங்கி கிடக்கும் மக்கள் வெகுவிரைவில் விடுதலையின் சுவாசக்காற்றை சுவாசிக்க நல் உள்ளம் படைத்தவரின் தியாகங்கள், அர்ப்பணங்கள் துணைபுரிவதாக.

சரத்ஜீவன் சாவு உன்னை சாகடித்தாலும், உன் ஜீவனை சரித்திரம் ஒரு போதும் சாகடிக்காது. உறுதியான உனது தோற்றம் போல உன் உள்ளமும் உரமுள்ளதே! பறித்தெடுக்கப்பட்ட பல்லாயிரம் அப்பாவி உயிர்களின் கோரமாய்ச் சிதறடிக்கப்பட்ட உடலங்களைக் கண்டு உன் இதயமே தாங்காமல் வெடித்துக்கொண்டதோ! ஆறாண்டு உன் குருத்துவப் பணியின் மகத்துவம் ஆயிரமாண்டுகளுக்கும் மங்காமல் நினைவு கூரப்படும். கிறிஸ்துவின் தியாகச்சுடர் உம் உருவில் என்றும் சுடர்விடுகிறது. ஆண்டவரில் உம் ஆன்மா அமைதி காண்பதில் ஐயமில்லை.

அருட்பணி. இ.கொ.சகாயநாயகம்
பங்குக்குரு யாழ் பேராலயம்.

---

# சரத்ஸீவன் ஒரு சரித்திர நாயகன்

சரத்ஜீவன் சாவு உன்னைச் சாகடித்தாலும், உன் ஜீவனை சரித்திரம் ஒரு போதும் சாகடிக்காது.

உறுதியான உனது தோற்றம் போல உன் உள்ளமும் உரமுள்ளதே! பறித்தெடுக்கப்பட்ட பல்லாயிரம் அப்பாவி உயிர்களின் கோரமாய்ச் சிதறடிக்கப்பட்ட உடலங்களைக் கண்டு உடன் இதயமே தாங்காமல் வெடித்துக் கொண்டதோ! ஆறாண்டு உன் குருத்துவப் பணியின் மகத்துவம் ஆயிரமாண்டுகளுக்கும் மங்காமல் நினைவு கூரப்படும். கிறீஸ்துவின் தியாகச் சுடர் உம் உருவில் என்றும் சுடர் விடுகிறது. ஆண்டவரில் உம் ஆன்மா அமைதி காண்பதில் ஐயமில்லை.

*அருள்தாசன்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரம் – சாட்சியம் சொரிந்த அருட்தந்தை சரத்ஜீவன்

நல்ல ஆயன் நானே தந்தை என்னை அறிந்திருக்கிறார்.... என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரை கொடுக்கிறேன். (யோவான்10:14)

அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதர் அவர்கள் முல்லைத்தீவில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக ஷெல் தாக்குதலில் காயப்பட்டு அங்கிருந்து புறப்படும் போது அருட்பணி சரத்ஜீவன் அடிகளை தன்னுடன் கூடவரும்படி அழைக்க "இறுதிவரை நான் எனது மக்களுடன் தான் தங்குவேன்" என்று விடை பகிர்ந்தார். தான் கூறிய வார்த்தைகளை பயம், கவலை, பசி, தாகம் போன்றவற்றோடு நீண்டகாலம் வாழ்ந்து நாள் ஒன்றிற்கு ஒரு நேர கஞ்சி மட்டும் உணவாக உட்கொண்டு துன்புற்று வாழ்ந்த தனது மக்களுடன் தனது கடைசி நிமிடம் வரை வாழ்ந்தார். அருட்பணி மரியாம்பிள்ளை, த.சரத்ஜீவனின் வீரமுள்ள சாட்சியம் நிறைந்த வாழ்விற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. மடிந்து கொண்டிருக்கும் மக்களுக்கு ஆறுதல் கூறியும் மரித்தோரை அடக்கம் செய்தும் காயப்பட்டவர்களை பராமரித்தும் வந்தார். இறுதியாக அங்கு தங்கியிருந்த மிகுதித்தொகை மக்களுடன் அங்கிருந்து புறப்பட்ட பொழுது அவர் மிகவும் பெலவீனமடைந்து முழுமையாக சோர்வுற்றிருந்தார். இறுதியாக மாரடைப்பு ஏற்பட்டு தன்னுடைய உன்னதமான உயிரை நல்லாயனும் கிறிஸ்துவுமாகிய தன் எஜமானிடம் தனது ஆவியை ஒப்படைத்தார்.

சகிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வாழ்ந்த மக்களோடு இறுதிவரை இருந்து அர்ப்பணிப்போடும் சாட்சியத்தோடும் ஆழமான விசுவாசத்தோடும் பணிபுரிந்தார். இதில் குருக்கள், துறவற சபைகள், யாழ் கத்தோலிக்க சமூகம் நிறைவடைகிறது. மற்றவர்களுக்காக தன்னுயிரை துச்சமாக மதித்து அதனை பலிகொடுக்கும் அளவிற்கு கடவுளை மகிமைப்படுத்தினார். அனைவருக்கும் இறைவன் கொடுத்த இம்மாபெரும் கொடைக்காகவும் விசேடவிதமாக அருட்தந்தை சறா அவர்களுக்கு கொடுத்த தன்னலமற்ற தியாகம் நிறைந்த வாழ்விற்காகவும் இறைவனை புகழ்வதோடு நன்றியும் கூறுகின்றோம்.

இவருடைய குடும்பத்தோடு நெருங்கி பழகிய காரணத்தால் சிறுவயதில் இருந்தே நன்கு அறிவேன். இவர் தன்னுடைய குடும்பத்தில் செல்லப்பிள்ளையாக மகிழ்வோடு வாழ்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னுடைய பேராலய பங்குத்தந்தை பணிக்காலத்தில் பீடப்பணியாளனாக தன்னை இணைத்துக் கொண்டு பேராலயத்தில் இடம்பெற்ற அனைத்து சமய வழிபாட்டு நிகழ்வுகளிலும் சுறுசுறுப்போடு பங்குபற்றியவர். பேராலய இளைஞர் உருவாக்க இயக்கத்தில் துடிப்புள்ள உறுப்பினராக செயற்பட்டவர். பீடப்பணியாளர் சபையிலும் இளைஞர் உருவாக்கல் இயக்கத்திலும் இவர் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்.

புனித மாட்டினார் குருமட வாழ்க்கையில் மட்டுமல்ல புனித பிரான்சிஸ் சவேரியார் பெரிய குருமடத்திலும் மற்றவர்களுக்கு முன் உதாரணமாக திகழ்ந்தார். இவர் எப்பொழுதும் எங்கும் இரக்கம் உள்ளவராக வாழ்ந்து எளிமையை கடைப்பிடித்தார். இவர் தான் பணி ஆற்றிய எல்லாப் பங்குகளிலும் தன்னுடைய கறைபடியாத பணிகளை மகிழ்ச்சியோடு செய்தார். முல்லைத்தீவில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளப்பெரிய சேவைகளை செய்து இறுதியாக உருத்திரபுரத்திலும் வன்னிப்பிரதேசத்தில் இறுதி பேரவலத்தில் ஆற்றிய பணிகளுக்கு மகுடம் சூட்டுவது போல் அன்புச் சேவையில் தன்னை முழுமையாக நிறைவு செய்த தனது ஆன்மாவை விலைமதிக்க முடியாத பலியாக ஒப்புக்கொடுத்தார்.

மறைத்திரு பொன். இம்மனுவேல் செல்வராஜா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எம் மனங்களில் கொலுவிருப்பாய்"

"சரத் ஜீவன்"
நீ இறந்தும் வாழ்கிறாய்.
ஏனென்றால்
உனது மரணமும்
கிறிஸ்துவின் மரணம் போன்றது.
ஆபத்தில் சிக்குண்ட
நின் மந்தைகளை காப்பாற்ற
பொன்னான உன்னுயிரை
ஆகுதி ஆக்கினாய்
அலைந்து திரிந்த உன் மக்களுக்காய்
உன்னையே நீ அழித்துக்கொண்டாய்
"மக்கள் இருக்கும் வரை
வரமாட்டேன்" என்று சொன்னாய்.
நீ சொன்ன வார்த்தைக்கும்
அர்த்தம் கொடுத்தவன் நீ
தன்னை தானே அழித்து
அணுவணுவாய் தனை இழந்து
நெற்றியிலே திலகமாகும்
மணம் வீசும் சந்தனம் போல்
நீயாக முன்வந்து
தேய்ந்து தேய்ந்து
தேய் பிறையாகி
மக்கள் மனங்களில்
பௌர்ணமி ஆனாய்.

பீடப்பணியாளனாய்
திருப்பீடத்தில் உனைக்கண்டோம்
பேராலயத்தில் இசைமீட்டி
இறைவனை நீ புகழ்ந்து நின்றாய்
இளைஞர் குழாமிலே






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அங்கமாய் நீ இணைந்து
அரும்பணிகள் பல புரிந்தாய்.
இறைவனின் குருவாகி
பேராலய பங்கினிற்கு
பெருமை சேர்த்து
அணி செய்தாய்.

"தன் நண்பனுக்காக
உயிரை கொடுப்பதை விட
மேலான அன்பு இல்லை"
என்ற இறைவார்த்தையை
உனதாக்கி வாழ்ந்து நின்றாய்.
இறைமகன் யேசுவைப் போல்
நல்லாயனுக்குரிய
நற்பண்புகளை
மகிழ்வோடு வெளிக்கொணர்ந்தாய்
நாம் வாழும் பிரபஞ்சம்
அழிந்துதான் போனாலும்
வேதத்தின் சிறு "குற்றும்"
அழிந்திடாது என்பதைப்போல்
உன்னுடைய
உயிர் தந்த தற்கொடையும்
களங்கமற்ற அன்புறவும்
என்றுமே அழியாமல்
எம் மனங்களில் கொலுவிருக்கும்.



இ.அ.அமலரட்ணம் - யாழ் பேராலயம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடமை, அர்ப்பணம், சான்றாண்மை நிறைந்த எனது உடன்பணியாளர் அவர்!

அருட்பணி சரத் ஜீவன் எம்மைவிட்டுப்பிரிந்து நாட்கள் 31. அவருடனான அனுபவத்தை பகிர்வதில் மனங்கொள்கிறேன். அவருடன் நான் பயணித்த பாதையை மூன்று கூறுகளாக்கியுள்ளேன்.

1) முல்லைத்தீவில் உதவி பங்குக்குரு 2) வன்னி மறைக்கோட்டையின் உடன்பணியாளர். 3) வலைஞர் மடத்தில் இடம் பெயர்ந்த அகதி.

முல்லைத்தீவில் உதவி பங்குப்பணியாளர்

அவர் எனது ஆழ்ந்த அன்பிற்கு பாத்திரமான உதவிப்பணியாளர். பிரமாணிக்கம், அர்ப்பணம், உயர்மானிட விழுமியங்கள் கலந்த மனிதனாகப் பார்த்தேன். தொடக்க 2004ல் எனது பங்கிற்கு அருட்பணி சரத் ஜீவன் (சரா) வருகை தந்திருந்தார். இவ்வேளையில்தான் பங்கின் பணிகள் பெரிதளவில் அதிகரித்தது. இந்தியாவில் இருந்தும் வேறு இடங்களிலிருந்தும் 1990களில் இடம் பெயர்ந்தவர்கள் வருகைதர தொடங்கினார்கள். சமூகத்தை கட்டியெழுப்புதல், பங்கை உருவாக்கல், பங்கின் அமைப்புக்களை நிர்மாணித்தல், நிறுவன பணிகள், பங்கின் பணிமுறைகள், பங்கிற்கான நெறிமுறைகள் அனைத்தையும் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது. பங்குக் களத்தில் அனைத்துப் பணிகளையும் பொறுப்பாக எடுத்து மகிழ்வுடன் பணியாற்றுவார். அழகு புன்னகையுடன் களைத்தாலும் இரவு பகல் பாராமல் கொடுத்த பணியை அனைவருடைய திருப்திக்கும் நிறைவாக்குவார். யாழ் பேராலயத்தில் பீடப்பணி, இளைஞர் மன்ற அங்கத்துவ அனுபவ பின்புலத்தில் இரு மன்றங்களை செயல்திறன் மிக்க அர்ப்பணம் கொண்ட அங்கத்தவர்களாக உரு மாற்றினார். சிலாவத்தையின் புனித ஆனாள் ஆலய கட்டுமானப் பணிகளை பொறுப்பெடுத்து தானே அதன் வரைபடத்தையும் ஒழுங்கமைத்து மிகக் குறைந்த செலவில் கட்டி முடித்தார். அதற்கு தேவையான கட்டிட மூலப்பொருட்களை கொழும்பிலும் முல்லைத்தீவு கடற்கரையிலும் இருந்து தானாகவே எடுத்து பணிகளைச் செய்தார். பங்கில் அனைத்து வீடுகளையும் தரிசிப்பார். நத்தார் நாட்களில் வீடுகளை ஆசீர்வதிப்பார்.

இலங்கையின் கிழக்கு பகுதியை 2004 கடல் கோள் தாக்கியதில் முல்லைத்தீவு மிகக் கேவலமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று. அந்நகர மும் சுற்றாடலும் நீரினால் அடித்துச் செல்லப்பட்டு 3000 பேரை காவு கொண்டும், அதிகமானோரை காயப்படுத்தியும் சென்றது. இப்பேரவலத்தின் தொடக்கத்திலிருந்தே இறந்தோரை அடக்கம் செய்வதிலும் உறவினருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பியோருக்கும் ஆறுதல் கூறுவதிலும் பங்கின் இடிபாடுகளுக்குள் மிஞ்சியதை எதிர்காலத்திற்கு சேகரித்து வைப்பதிலும் தனது பணியில் முழுமூச்சாக ஈடுபட்டார். இவைகள் எல்லாம் உடல் உள உணர்வுகளை தாரைவார்க்கும் அனுபவங்கள். பெருந்தன்மை, அர்ப்பணம், தியாகங்களின் வழியாக இவைகளை நிறைவு செய்தார். மார்ச் 2005 முல்லைத்தீவிலிருந்து உருத்திரபுரம் பங்கிற்கு மாற்றப்பட்டார்.

வன்னி மறைக்கோட்டையின் உடன் பணியாளர்.

இது அவரது பங்குக்குருவான முதல் தளப்பணிகளை அர்ப்பணம், அன்பு, ஆத்ம வாஞ்சை, அர்ப்பணிப்புகளுடன் கூடிய பங்கை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார். முன்னைய போர் சூழலினால் உடைந்து போன ஆலயத்தை ஆயரினதும் மக்களினதும் உதவியுடன் திருத்தவேலைகளை ஆரம்பித்து மக்கள் ஒன்றிணைந்து வழிபாடு நடத்தக்கூடிய மிக அழகான ஆலயமாக கட்டி முடித்தார். அனைவராலும் அன்பு செய்யப்பட்டு கவரப்பட்ட பங்கு குருவாக திகழ்ந்தார்.

பங்கு பணிகளுடன் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் யேசுஅவை அகதிமைய இணைப்பாளராக நியமிக்கப்பட்டார். இது பாரிய பொறுப்பாக இருப்பினும் அவருக்கு உரித்தான அர்ப்பண, தியாக குண இயல்புகளுடன் இடம் பெயர்ந்தோரின் அடிப்படை தேவையினை நிறைவேற்றி வந்தார். இத்தருணத்தில் சமாதான ஒப்பந்தம் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே உருவானது. இதனால் வன்னி மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. உணவும் அதன் முக்கிய பொருட்களும் சோதனை சாவடியில் மட்டுப்படுத்தப்பட்டது. கட்டிடப்பொருட்கள் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டது. தென்பகுதி பயணங்கள் இதை விடமோசமானது மிகச் சிரமமானது. வன்னியில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் கிராமங்கள், சமூகங்கள் தோறும் இளைஞர்கள் இயக்கத்திற்கு இணைக்கப்பட்டது பங்கு குருக்களுக்கு பெரும் துன்பியல் நிகழ்வாக இருந்தது. இவ்வேளையில் எமது மத்தியில் நடக்கும் நிகழ்வை முன்னிட்டு பங்கு மக்களின் ஆழ்ந்த துயரத்தை நீக்குவதற்கு பங்கு குருக்களை பல தடவை சந்தித்தோம். எமது அவலங்களின் வெளிப்படையாகவும் பக்கசார்பின்றி திறந்த மனத்தோடு கருத்துக்களை வெளியிடுவார். அநேகமாக இதற்கு பொறுப்பானவர்களோடு பேசி ஒழிக்கும் படி கூறியிருந்தோம். அத்துடன் வான் தாக்குதல் அப்பாவி மக்கள் மீது செல்வீச்சுக்களை பொழிதல் உணவு தடைகளுக்கு எதிராக சர்வ மத பிரார்த்தனைகளும் கண்டண ஊர்வலங்களும் நடாத்தி அரசாங்கத்திற்கும் ஐ.நா சபைக்கும் மக்களை தாக்க வேண்டாம் என்று மகர்ஜர்களை அனுப்பினோம். இவ்அனைத்துப்பணிகளிலும் அவருடைய வகிபாகம் போற்றுதற்குரியது. என்னை கவர்ந்தது என்னவென்றால் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த குரு என்ற மட்டில் கண்டணக்கூட்டங்ளை தலமை தாங்கி செல்வது வழமை அவ்வேளைகளில் எப்பொழுதும் அவர் எனக்கு அருகில் துணிவுடன் இருந்து உதவியளிப்பார். அவ்வேளைகளில் கமராக்கள் படங்களைப்பதியும் தன்னை மறைத்துக்கொள்ளாமல் துணிவுடன் இருப்பார். அவருடைய துணிவையும் என் மேல்வைத்த அபார அக்கறையையும் மறக்கமுடியாது

வலையர் மடத்தில் இடம் பெயர்ந்த அகதியாக

இலங்கை பாதுகாப்பு படைகள் கிளிநொச்சியை முழுமையாக கைப்பற்றியதன் பிற்பாடு முல்லைத்தீவு மாவட்டம் நோக்கி முன்னேறினார்கள். அனைத்து குடிமக்களும் அவர்களுக்கு பணிபுரிகின்றவர்களும் அரசு அறிவித்ததற்கு அமைய சமாதான வலயமாகிய சுதந்திரபுரம், தேவிபுரம் ஆகிய இடங்களுக்கு அடைக்கலம் புக வேண்டியிருந்தது. இவ்விடங்களிலும் சண்டைகள் தொடங்க அரசு அறிவித்ததற்கு அமைய புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் பாதுகாப்பு வலயங்களுக்கு போக வேண்டியிருந்தது. நான் முன்கூட்டியே இந்த வலயத்திற்கு சென்று வலையர்மடத்தில் வாழ்ந்து வந்தேன். அங்கே அனைத்துக்குருக்கள், அருட்சகோதரிகள் அவர்களிடமிருந்த பெற்றோர்களை இழந்த வலுவற்ற குழந்தைகள் கியுடெக், யேசுஅகதிமையம் அனைவரும் பணிபுரிந்த வலயர்மடத்திற்கு வருகை தந்தார்கள். அனைவரும் ஆலய வளாகத்துள் சரா உட்பட இடம்பெயர்ந்தார்கள். இது பெப்ரவரி, மார்ச் மாதத்தில் இடம் பெற்றது.

இங்கும் சராவின் அர்ப்பணிப்பு ஆழுமை அனுபங்களை கண்டு கொண்டோம். அவர் அங்கிருக்கும் குருக்கள், துறவிகள், அநாதை சிறுவர்கள் மனிதவள நிறுவனங்கள் (கியுடெக், யேசு அவை அகதிமையம் JRS உட்பட) எமக்கு சந்தையில் பொருட்களை வாங்கிவருவார். செல்வீச்சுக்களும், பல்குழல் எறிகணை தாக்குதலும் நிறைந்த ஆபத்தான பயணம். எம்மை பசியிலிருந்து காப்பாற்ற இப்பணியை மகிழ்வுடன் புரிந்தார். அத்துடன் மூன்று இலட்சம் இடம்பெயர்ந்த மக்களுக்கு பொருள் தட்டுப்பாடு உச்சமாக இருந்தது. அருட்பணியாளர்கள் நேசநாயகம், மரியதாஸ் ஆகியோருடன் இணைந்து இரவு, பகல் பாராது அடக்கம் செய்தார்கள். பல தடவைகள் பிரிந்த உடலங்களை பாயில் சுற்றி ஓர், இரு மணித்தியாலயத்துக்குள் அடக்கம் செய்து விட வேண்டும். பாயில் சுற்றியாவது அவர்களை அடக்கம் செய்வது தான் உறவினர்களுக்கு கொடுக்கும் மனத்தேறுதலாக இருந்தது. அத்துடன் கூடாரங்களில் இருந்த இறப்புகளை சந்தித்த குடும்பங்களை தேற்றியும், அவர்களோடு இணைந்து செபித்தும் வருவார்கள். எனக்கு காயம் ஏற்பட்டதினால் ஏப்ரல் 22 வலயர்மடத்தைவிட்டு வெளியேறி வவுனியாவுக்கு வந்தேன். மிகுதி வர்ணனை நம்பிக்கையான தகவல்களிருந்து தருகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிச்சமர் மே மாத நடுப்பகுதியில் தொடங்கியது. சராவும் இடம் பெயர்ந்தவராக அங்கே மக்களின் வறுமை, பாதுகாப்பின்மை, உயிர் அச்சுறுத்தல், தொடர் குண்டுவீச்சுக்கள், சுடுகலனின் ஆக்கிரமிப்புக்கள் அனைத்தினுள்ளும் இவரும் ஒருவரானார். சமரின் இறுதி நாட்களுக்குள் வலையர்மட ஆலய வளாகத்தில் இருந்த அனைவரும் முள்ளிவாய்க்காலுக்கு இடம்பெயர்ந்தார்கள். அத்துடன் அனைத்து மக்களும் முள்ளிவாய்க்காலுக்கு செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

சாராவின் இறுதிப்பயணம் - கடத்தல் (பாஸ்கா )அனுபவம்

பதுங்குழிகள் அமைத்து ஒரு சில நாட்கள் பாதுகாப்பாக இருந்தது. முள்ளிவாய்க்காலுக்கு இறுதி சமர் தொடங்கியதும் ஒரு பதுங்குழியோ, ஓர் இடமோ பாதுகாப்பில்லை. பலர் இறந்தார்கள், பலர் காயப்பட்டார்கள் சமரில் அகப்பட்ட மக்கள் சமைக்கவும், தண்ணீர் எடுக்கவும் பதுங்குழிகளை விட்டு விலக முடியாத நிலை. அங்கே உணவும், குடிப்பதற்கு நீரும் இல்லாமல் மக்கள் வாடினார்கள். இது தான் நாம் காணாத பேரவலம். இதை அறிவிக்கவும் தங்களோடு இருந்தவர்களை தெரியப்படுத்தவும் மூன்று தடவை வெள்ளை கொடியுடன் இராணுவத்திடம் செல்ல முயன்று இறுதியில் அவர்களை சந்தித்து அங்கு உள்ளவர்களுக்கு பாதுகாப்பான வழியை அமைத்துக் கொடுக்கும் படி கேட்டுள்ளார். இவருடன் இருந்தவர்களுக்கு உழவுஊர்தி ஒன்று இரட்டைவாய்க்கால் செல்வதற்கு இராணுவத்தால் கொடுக்கப்பட்டது. சரா சில நாட்கள் தொடர்ச்சியாக சாப்பாடு, குடிக்க நீர் இன்றி இருந்ததினால் பெலவீனப்பட்டிருந்தார். காயப்பட்டவர்களுக்கு இடம் கொடுப்பதற்கு உழவூர்தியில் ஏறாமல் நடந்தார். இரு தடவை முடியாமல் தள்ளாடினார். நிலமை மோசமாக இராணுவத்துக்கு அறிவிக்கப்பட்டு அவர்களுடைய மருத்துவக் கூடாரத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டார். அங்கு சேலையின் பாய்ச்சப்பட்டது. அதில் இருந்தும் மீளாமல் தன் ஆவியை தந்தையின் கரங்களில் ஒப்படைத்தார்.

இறுதிவரையும் மற்றவர்களுக்காக வாழ்ந்தார். தனது உயிரை அர்ப்பணிக்கும் ஈறாக அவருடைய ஆண்டவரும் தலை ஆயனுமாகிய கிறிஸ்துவைப் போல் உயிரை ஒப்புக்கொடுத்தார். தனது உயிருக்கு ஆபத்து நெருங்கிய பொழுதும் தனது மக்களை கைவிடவில்லை ஆனால் அவர்களுக்காக தனது உயிரை தற்கொடையாக்கினார்.

*அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதர்*
*பங்குப்பணியாளர் முல்லைத்தீவு*
*இணைப்பாளர், நீதி - சமாதான ஆணையம், வன்னி.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் மறவோம்



அறிவிலும் ஆற்றலிலும் நீர் ஒரு மகான்
ஆன்மீகத்திலும் பணிசெய்வதிலும்
நீர் ஒரு கிறிஸ்து
மரணமும் பட்டினியும் எம் மக்களை
துரத்திய வேளையில்
எம் மக்களுக்காய் அஞ்சாது
பணி செய்த குருவே!

தூரங்கள் சுருங்கியது
உறவுகள் பிரிந்தது
மக்கள் மரணிக்கின்ற வேளையில்
சர்வதேசத்தின் குரல் மௌனித்து நிற்க
மக்களின் குரலாக
ஒலித்த குருவே!

மக்களுக்காய் பணி பல செய்தவரே
அன்பாலும் பணி ஆற்றலாலும்
மக்களின் மனங்களில் நிறைந்தவரே
எம் மக்களிடம் இருந்து பிரிந்து
சென்றது ஏனோ!

தாங்க முடியவில்லை குருவே
உம் பிரிவு
எம்மை நீர் பிரிந்து சென்றுவிட்டாலும்
உம்மை நாம் என்றும் மறவோம்!

*இளைஞர் உருவாக்கல் இயக்கம்,*
*புனித மரியன்னை பேராலயம்,*
*யாழ்ப்பாணம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒப்பற்ற சுயபரித்தியாகம் கொண்டவர் எம் தந்தை"


இயேசு சபை அகதிப்பணியின் ஸ்தாபகர் மறைபணி பேதுரு இருப்பேயின் கனவினை நனவாக்கிய ஓர் உன்னத மறைபணியாளராகத் திகழ்ந்தவர் ததேயூஸ் சரத்ஜீவன் அடிகளார். தாயின் கருவில் உருவாகும் முன்னரே இறைவன் தேர்ந்தெடுத்தது மட்டுமல்லாமல் பிறர் அன்புப் பணிதனை மிகுதியாய் மேற்கொள்ளவும் அழைத்துள்ளார் என்பதினை அவரது வாழ்வின் ஊடாகவும் அவர் செய்த பணியின் ஊடாகவும் வெளிப்பட்டுள்ளதினை நாம் கண்டு அனுபவித்துள்ளோம். ஏனெனில் கடவுளுக்காய் தம்மை அர்ப்பணித்தவர் கடவுளை பிறரன்பு பணியிலும் மக்களின் மனங்களிலும் கண்டு கொண்டார். அவருக்காக தம்மையே முழுமையாக அர்ப்பணித்துள்ளார்.

தோழமை, குரல்கொடுத்தல், பணிசெய்தல் போன்ற உயரிய பண்புகளை தன்னகத்தே கொண்டு யேசுஅவை அகதிப்பணியத்தில் (JRS) பணியாற்றியுள்ளார். ஏனெனில் JRS குடும்பத்திற்கு இவரது வரவு ஓர் வரப்பிரசாதமாகவே காணப்படுகின்றது. வன்னி நிலப்பரப்பில் கிளிநொச்சி மாவட்டத்தின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டகாலம் முதல் அவர் ஆற்றிய பணிகள் சொல்லில் அடங்காதவை. பங்குப்பணிகளோடு JRS பணியினையும் மனநிறைவோடு ஏற்று எந்த வசதிகளையும் எதிர்பாராமல் இருக்கின்ற வளத்தினைக் கொண்டு இன்முகத்துடன் பணியாற்றியவர்.

கல்விப் பணிமுதல் ஏனைய எல்லாப் பணிகளையும் மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றியவர் மட்டுமல்லாது அனைவரோடும் நல்லுறவை வளர்த்து அவர்களது துன்பதுயரங்களில் அவர்களுக்கு உற்ற ஆறுதல் அளித்ததோடு வாழ்வினையும் வளமாக்கியுள்ளார். போர்க்கால சூழ்நிலையிலும் இயற்கை அனர்த்தங்களிலும் அல்லல்ப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதோடு அவர்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து தாமும் அவர்களோடு வாழ்ந்த ஒரு ஜீவன்.

2008ம் ஆண்டு மார்கழி மாதம் இலங்கை JRS குடும்ப கலந்துரையாடலில் அவரது பணியின் அனுபவத்தினை கூறும் போது அவரது இரு கண்களும் கலங்கின. அத்தகைய நிலை தனக்காக அல்ல மாறாக தனது மக்களுக்காகவே. அவர் மனமுருகி அழுதார். இத்தகைய நிலையிலே நாமும் அங்கு சென்று பணியாற்ற வேண்டும் என்ற உணர்வு எமக்குத் தோன்றியது. இருப்பினும் அவர் கூறிய வார்த்தை என் பணிக்கும் JRS குடும்பத்திற்கும் என்றும் மறக்க முடியாத ஒரு வார்த்தையாக அமைந்தது. "எனக்காகவும், எம் மக்களுக்காகவும் செபியுங்கள்" என்ற வார்த்தை தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அது. எம் காதுகளில் இன்றுவரை இந்த வார்த்தை ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ஏனெனில் அவர் பணியாளர்களோடு மட்டு மல்ல சின்னக் குழந்தை முதல் பெரியோர் வரையும் ஒரே தன்மை கொண்ட இயல்புடன் பழகியவர் நம் தந்தை அவரிடம் நாம் கண்ட பண்புகளான மன்னிக்கும் பண்பு, நிறைவாக்கும் பண்பு, மகிழ்விக் கும் பண்பு, வாழ்விக்கும் பண்பு, தாரைவார்க்கும் பண்பு, பிறரை அன்பு செய்யும் பண்பு, நிபந் தனையில்லாமல், எதிர்பார்ப் பில்லாமல் அன்பினை முன்கூட்டியே வெளிப்படுத்தும் ஓர் பண்பு என்ற பல பல பண்புகளை சொல்லிக் கொண்டேபோகலாம்.

உயிர் உள்ளவரை பிறருக்காய் உழைத் திட்ட ஓர் உத்தமரை பல உயிர்களை வாழ் வித்த ஜோதியாய் தன் நிலை பாராது பிறர் நலம் கருதி தன் னையே உருவாக்கிய திரியாய் வாழ்ந்தவர் எம் அன்புக்கும் மதிப் புக்குமுரிய மறை பணியாளர் ததேயூஸ் சரத்ஜீவன் அடிகளார்.




எனவே அவரது வாழ்வும், இறப்பும் JRS குடும்பத்திற்கு மட்டுமல்ல எல்லோருக்கும் ஓர் முன்மாதிரிகையான வாழ்வு மட்டுமல்ல கிறீஸ்துவின் ஒளியில் நடந்த ஓர் உன்னத மறைபணியாளர்.

*யேசுஅவை அகதிப்பணியம் -*
*JRS குடும்பம்*
*இலங்கை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரா ஓர் அபூர்வ பிறவி நீ!

வாழ்க்கையில் பலருடன் பழகும் சந்தர்ப்பங்கள் நிறையவுண்டு. ஆனால் ஒரு சிலர் மட்டும் ஏன் மனித மனங்களில் நீடித்த இடம் பெறுகின்றனர். அதிலும் வியப்பு எதுவெனில் அவர்களில் சிலர் பழகிய குறுகிய காலத்திலேயே சாவை சந்தித்து விடுகின்றார்கள் என்பது தான். அவர்கள் மனங்களில் இடம் பெறுவதற்கு அவர்களிடமிருந்த அபூர்வ பண்புகள், அவர்களின் காலத்திற்கு முந்தைய மரணம் காரணமாக அமையுமா?

சராவிடமிருந்த அபூர்வ பண்புகள் பற்றி எழுதுவதற்கு முன்பு சரா சவேரியார் குருத்துவக் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் இருந்தே சராவை நன்கு எனக்கு தெரியும். என்னிடம் கல்வி கற்றவன் என்ற வகையில் ஒரு மாணவனாக இருக்கும் போதே சரா எந்த விடயத்தையும் கவனமாக serious ஆக, பொறுப்பாக எடுத்து செயல்படுவதை அவதானித்துள்ளேன். மற்ற மாணவர்கள் பகிடி கேலி செய்து கலகலப்பாக இருக்கும் போது சரா படிக்கும் காலத்திலேயே எல்லாவற்றையும் கவனமாக, நிதானமாக செய்யும் பண்பு கொண்ட ஒரு மாணவனாகவே இருந்துள்ளார். சராவின் மனம் போல் உடலும் பெரிதாக இருந்தது. மாணவர்களின் வழமையான கேலிகள் பகிடிவிட்டு சரா விதி விலக்கல்ல. ஆனாலும் அதைப் பொருட்படுத்தி அதை ஒரு விடயமாக்கி கோபித்து சினக்கும் அளவிற்கு சரா மனதில் முதிர்ச்சியடையாதவர் அல்ல. சிரித்து விட்டு தன் வழமையான பாணியில் செயல்படும் பண்பு அபூர்வம் இல்லையா! தன்னைப்பற்றிய உயர்ந்த எண்ணம் ஆழுமை கொண்ட மனிதன் மற்றையவர்களின் வசைச்சொற்கள், கேலிகள் என்பவற்றை பெரிதுபடுத்த மாட்டார்கள்.

குருமட மாணவ பராயத்திற்கு பின்பு சராவினுடைய சந்திப்பு வன்னியில் மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றது. வன்னியில் சராவினுடைய சந்திப்பானது ஒரு சக குரு என்ற அந்தஸ்தில் மட்டுமல்ல, எனது பணிக்கும் சரா JRS ல் இருந்து மேற்கொண்ட பணிக்குமிடையில் ஒரு ஒற்றுமை. அதனால் எமக்கிடையே ஏற்பட்ட அனுபவ பகிர்வுகள், கருத்துப் பரிமாறல்கள் எம் உறவை ஆழமாக்கியது. சரா எனக்கு வயதில் குறைந்தவராக இருந்தாலும் எனது சொந்த வாழ்விற்கு சரா சில மாதிரிகளை பதித்திருக்கின்றார். சரா ஒரு போதும் தனது நலனை முன்னிலைப்படுத்தியது கிடையாது. ஓய்வின்றி மக்கட்காக குறிப்பாக ஏழைகட்காக தன்னை ஆகுதியாக்கினார் என்பது தான் உண்மை ஒரு விதத்தில் ஓய்வின்றி கடின உழைப்புடன் இருந்ததினால் சாவு அவரை காலத்திற்கு முந்தியே இறைவன் சன்னிதானத்திற்கு அழைத்ததா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரா சரியானது என்று எதை கருதுகின்றாரோ அதை நேரடியாகக் கூறும் பண்புடையவர். பதவியை, வசதிகளை எதிர்நோக்காது ஏழைகட்காக வாழும் அபூர்வ பண்பு என் வாழ்விற்கு ஒரு மாதிரி என்று கூறலாம். எனக்கு மட்டுமல்ல மற்ற சக குருக்கட்கும் பயன்படும் என்பது என் எண்ணம்.

சராவின் வாழ்வில் பணியில் ஒரு சுயநல நிகழ்ச்சி நிரல் இருந்ததாக என் மனதில் இன்று வரை காணவில்லை. மனிதரில் பலர் பணிபுரியும் பொழுது சில நிகழ்ச்சி நிரல்களை முன்னிலைப்படுத்தியே பணி புரிவது மனித வரலாற்றில் புதிதல்ல. இதற்கு எவரும் விதிவிலக்கு அல்ல. ஆனால் சரா இந்தப் பண்பு இல்லாத ஏழைகளை முன்னிலைப்படுத்திய நிகழ்ச்சி நிரலுடன் பணிபுரிந்த ஒரு ஆபூர்வ மனிதன்.

சராவின் பணி பங்குத்தளத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. JRS - இயேசுஅவை அகதிகள் பணியத்தின் வன்னிப்பிராந்திய இணைப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார். எனவே அவரின் பணி, அனுபவம் விரிந்து சென்றது. JRS ன் வன்னி இணைப்பாளராக பணி புரிந்ததினால் அவர் பல அபிவிருத்தி திட்டங்கட்கு பொறுப்பாக இருந்தார். அபிவிருத்தி திட்டங்கள் காரணமாக பல இலட்சம் ரூபாய்களை மக்கள் பணிக்காக அவர் செலவு செய்தார். ஆனால் அவரின் வாழ்வு சில சமயம் அடிப்படை வசதிகளைக் கூட இல்லாமல் எளிமையான ஒரு வாழ்வாக இருந்துள்ளது.. வள்ளுவர் கூறும் ‘பற்றற்றான் வாழ்வு’ சராவின் வாழ்வில் இருந்துள்ளது. இது இவரின் அபூர்வ பண்பைக் காட்டும் இன்னோரு சுட்டியாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் மேலாக சராவின் அபூர்வப் பண்பு மெதுமையான இரக்கம் கொண்ட, மற்றவர்களின் துன்பத்தில் தான் துவண்டு போகும் பண்பு. மற்றவர்கள் துன்பப்படுவதை சராவால் தாங்கமுடியாது. துன்பப்படுபவர்களை விட தான் அதிகம் வேதனை அனுபவிப்பது சராவின் பண்பு. வன்னியில் குறிப்பாக வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் கொடூரச் சாவுகளின் அனுபவம் சராவின் இறுதி அத்தியாயத்திற்கு பெரும் பங்காற்றியிருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. உடல் வலுவின்மையைவிட உள்ளத்தின் சுமை, வேதனை அவரின் சாவிற்கு வழிவகுத்தது. மற்றவர்களின் துன்பத்தில் சாவில் இன்பம் காணும் சுயநல உலகில், மற்றவர்களின் துன்பக்கண்ணீரில் மனம் வெதும்பி தன்னுயிரைக் கொடுத்ததினால் சரா ஒரு அபூர்வப் பிறவி தான். அபூர்வ பிறவி என்பது மற்றவர்களிடம் பொதுவாக காணப்படும் பண்புகளை விட வித்தியாசமான பண்புகளுடன் வாழ்வது. சராவின் வாழ்வில் நான் கண்டது எல்லாம் தனித்துவமானது தான்.

எல்லாவற்றிக்கும் மேலாக குருத்துவத்தில் சரா ஒரு அபூர்வப்பிறவி. தன்னை அழைத்த இயேசுவைப் போல் பலி, பலிப்பீடம், பலிப்பொருளாக தன் வாழ்வை, தான் வாழ்ந்த தளத்தில் தானே மனமுவந்து ஒப்புக்கொடுத்தது தான். தப்பிப்பிழைக்க வழியிருந்தும் தன்னை பலிப்பொருளாக்க வலிந்து மக்களோடு நின்று தன்னையே இயேசுவைப் போல் பலியாக்கினார். இது எல்லாவற்றையும் விட மேலானது மட்டுமல்ல சராவின் தனித்துவமுமாகும்.

*இறுதியாக* சராவை **2009** தை மாதம் **9ம்** திகதி சந்தித்தேன். சோர்ந்து களைத்து காணப்பட்டார். ஓய்வு தேவை என்றேன். மக்கள் இப்போது படும் துன்பத்தில் இருந்து எப்படி நான் ஓய்வு எடுப்பது என்பது தான் பதில். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. சரா உனக்கு நிரந்தர ஓய்வு தந்து இறைவன் அழைத்து விட்டாரா?

சரா நீ மானிடப்பிறவிகளில் - தனி
மனிதர்களில் அபூர்வப்பிறவி நீ
உன் இடத்தை நிரப்புவார் யார் இனி
மனதில் நீ மூட்டினாய் அணையாத தீ
பதிக்கின்றோம் உன் தடங்களில்
எம் பாதங்கள்.

*பணி. கி.ஜோ.ஜெயக்குமார்*
*கரித்தாஸ் - கியூடெக்*
*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்தந்தை சரத்ஜீவன் எளிமையினதும் பொறுப்புணர்வினதும் மறுவடிவம்

2009ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதி யுத்தம் இறுதிக்கட்டத்தை நெருங்கிய காலகட்டத்தில் அருட்தந்தை மரியாம்பிள்ளை சரத்ஜீவன் அடிகள் கிளிநொச்சியில் மாரடைப்பால் அகாலமரணம் அடைந்தார் என்ற செய்தியை அறிந்து நான் ஆழ்ந்த துக்கமும் அதிர்ச்சியும் அடைந்தேன். இவர் கிளிநொச்சி மறைக்கோட்டத்தில் உள்ள உருத்திரபுரம் பங்கில் பங்குத்தந்தையாக இருந்தார். யுத்த பிரதேசத்தில் மக்களுடன் இடத்திற்கு இடம் இடம்பெயர்ந்து கொண்டிருந்த இவர் தன்னுடைய வாழ்வின் இறுதிநாட்களை ஒழுங்கான உணவும் குடிநீரும் இன்றி பதுங்குகுழிக்குள் கழிக்க வேண்டியிருந்தது.

அருட்தந்தை சறா என்று யாழ் மறைமாவட்ட மக்களிடையே நன்கு அறியப்பட்ட இவரை 2004ம் ஆண்டு மார்கழி மாதம் முதன் முதலாக நான் சந்தித்தேன். நான் இப்பொழுது சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான மறுவாழ்விற்கான பணிக்காக முல்லைத்தீவில் உள்ள இரணைப்பாலை பங்கு பணிமனையில் தங்கியிருந்தேன். அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதருக்கு உதவியாக பணியாற்ற இவர் என்னையும் என்னோடு இருந்த ஏனையவர்களையும் சந்திப்பதற்காக வந்தார். மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த ஹொண்டா 90 மோட்டார் சைக்கிளில் எம்மை சந்திக்க வந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அதனால் அவருடைய மோட்டார் சைக்கிளையும் நாம் பயணித்த வாகனத்தில் ஏற்றிக்கொண்டு இரணைப்பாலையிலிருந்து 35 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள முல்லைத்தீவுக்கு சென்றோம்.

ஆரம்ப நாட்களில் தொடர்ந்து வந்த நாட்களிலும் இருபது தொடக்கம் முப்பதிற்கு மேற்பட்ட மறைமாவட்ட துறவறசபைகளைச் சேர்ந்த குருக்களுடனும் குருமடமாணவர்களுடன் முள்ளியவளை பாதையில் அமைந்துள்ள மாமுலை என்னும் இடத்தில் அருட்தந்தை ஜேம்ஸ், அருட்தந்தை சறா ஆகியோருடன் மிகவும் குறைந்த வசதிகள் உள்ள சிறிய கட்டிடத்தில் தங்கியிருந்தோம். நாங்களும் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த மக்களை சந்திப்பதில் தொடர்புபட்டிருந்தோம். ஒரு கிணறும் ஒரு மலசலகூடமும் மட்டுமே நாம் பாவிக்க கூடியதாய் இருந்தது. அருட்தந்தை சறா காலையில் நேரத்தோடு எழுந்து 75 அடி ஆழமான கிணற்றில் இருந்து தண்ணீரை அள்ளி நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவுவதற்காகவும் சமைப்பதற்காகவும் அங்கே இருந்த பானைக்குள்ளும், கொள்கலன்களுக்குள்ளும் நீரை நிரப்புவார். அருட்தந்தை ஜேம்ஸ், அருட்தந்தை சறா ஆகியோர் தங்களிடம் இருந்த பழைய சைக்கிளையும் அவர்கள் அணிந்திருந்த குருக்களுக்கான உடையையும் தவிர ஏனையவற்றை இழந்திருந்தனர். இதைப்பற்றி அவர்கள் எம்மிடம் முறையிடவில்லை. இருந்தும் தங்களால் செய்யக்கூடிய அனைத்தையும் அமைதியுடனும் சந்தோஷத்துடனும் செய்து கொண்டிருந்தார்.

இவர் குருவாக வந்து மிகக்குறுகிய காலமே பணியாற்றினார். (மே மாதம் 14ம் திகதி தன்னுடைய குருத்துவத்தின் 6வது வருட நினைவையும் அதற்கு முதன் நாள் தனது 41வது பிறந்த நாளையும் நினைவு கூர்ந்தார்) எளிமைக்கும் பொறுப்புணர்ச்சிக்கும் பெயர் பெற்ற இவர் தனது குருத்துவ அழைத்தலுக்கு ஏற்ப நம்பிக்கையுடனும் உண்மையான அன்புடனும் கடவுளுக்கும் மக்களுக்கும் சேவை செய்தார். அதே நேரத்தில் ஒரு குருவாகவும் ஒரு மனிதனாகவும் மற்றவரோடு தோழமை கொண்டிருந்த அவரை அனைவரும் விரும்புவர். தன்னுடைய சகோதர குருக்கள் மட்டுமல்ல அருட்சகோதரிகள் குருமடமாணவர்கள் மற்றும் பொதுநிலையினர் மீது அளவற்ற மரியாதை கொண்டிருந்தார். இவர் கடவுளின் மனிதனாக இருந்தார். புகழை விரும்பாத ஒரு தீர்க்கதரிசியாக இறைவனின் அடிச்சுவட்டை பின்பற்றி சுயாதீனமாக இறை அழைத்தலை ஏற்று 2003ம் ஆண்டு தனது 35வது வயதில் குருவாக அருட்பொழிவு பெற்றார். அவருடைய அன்பு உறவுகள் மற்றும் உறவினர்களால் அவருடைய உடலை பார்க்கவும் இறுதி மரியாதை செலுத்தவும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அவருடைய உடலை கொண்டு வந்து சொந்த இடமான யாழ்ப்பாணத்தில் அடக்கம் செய்வதற்கு கூட பாதை இல்லாமல் போய்விட்டது. அவருடைய மரணத்தின் ஒரு வாரத்திற்கு பின் நல்லடக்கம் நடைபெற்றது. இறுதி நாட்களில் கொழும்பில் உள்ள அந்நியகால சேவை நிலையத்தில் இவருடைய உடல் வைக்கப்பட்டிருந்தது.

அன்பான அருட்தந்தை சறா! நன்றாக பணிபுரிந்தீர் எமது பிரியாவிடையை கூறுகின்றோம். உமது உன்னதமான வாழ்வை எந்தவொரு கிறிஸ்தவனும் முன்மாதிரிகையாக எடுத்துக்கொள்ள முடியும். இறைவன் உமக்கு முடிவில்லாத வாழ்வை அளிப்பாராக.

*எம்.யோசப் ஜெயசீலன் (கிளரேசியன்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை வரும்படி கேட்பதாக இருந்தால் இனி ரெலிபோன் எடுக்காதே...

## – சராவின் சான்றுகள்

அவருடைய ஆற்றல் :

சறா சிறந்ததோர் பாடகரும், வீணைமீட்டுபவரும். இதனை அவர் பெரிய கோவிலின் வீணை மீட்டிய காலம் சான்று பகரும். மேலும் சறா பொறுப்புள்ள தலைவன் என்பதை அவருடைய பெரிய கோவில் பங்கின் பீடப்பணியாளர் தலைவராகவும் இளைஞர் மன்றத் தலைவராகவும் இருந்த காலங்கள் சொல்லி நிற்கும்.

அவரிடம் கொடுக்கப்பட்ட வேலையை விரைவாகவும், நேர்த்தியாகவும் செய்து முடிக்கும் ஒரு கருமை வீரன். சறாவிடம் வேலையை கொடுத்தால் 30 நாள் வேலையை 10 நாளில் செய்து முடித்து விடுவார். அவர் மாடு போல உழைப்பவர். இவரைப்பற்றிய எமது குருமுதல்வர் அருட்பணி. யஸ்டீன் ஞானப்பிரகாசம் அவர்களின் கருத்து இதனை மெய்பிக்கும்.

அவர் ஒரு சமூக சேவையாளர்

பங்கின் இளைஞனாக சமூகசேவைகளில் ஈடுபட்டு உழைத்தவர். குருமட வாழ்விலும் சமூக சேவை கழகத்துடன் இணைந்து தீவிரமாக செயற்பட்டார். குருவாக வந்து உதவிப் பங்குத் தந்தையாக முல்லைத்தீவு பங்கில் இவர் இருந்த போதே ஆழிப் பேரலையின் கண்மூடித் தனமான தாக்குதல் இடம் பெற்றது. இந்த அழிவில் மக்களின் அவலத்தில் கரம் பிடித்து வழிநடத்தி, தேற்றுகின்ற பெரும் பாக்கியத்தை இவர் பெற்றிருந்தார்.

உருத்திரப்புரம் பங்குத்தந்தையாக இருந்த போதும் கூட இவரின் துடிப்புள்ள சமூகச் சேவையின் மனப்பாங்கையும், எந்த பொறுப்பையும் துணிவுடன் ஏற்று நடத்தும் ஆற்றலையும் கண்ட யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் மூ.யூ.ரீ நிறுவனத்தின் வன்னி பிராந்திய இணைப்பாளராக அவரை நியமித்தார். தன்னில் கொண்ட நம்பிக்கையின் பிரகாரம் தன் இறுதி மூச்சு வரை தன் கடமையை செய்து முடித்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக வன்னியின் இறுதிப் போரில் இடம் பெயர்ந்து உண்ண உணவின்றி , உடுக்க உடையின்றி, இருக்க இல்லிடமின்றி வாழ வழியின்றி தவித்த மக்களோடு தன்னையும் கரைத்து தன்னால் இயன்ற பணிகளின் வழியாக அவர்களின் துன்பத்தில் துறந்த தியாகி தான் எங்கள் சறா.

அவருடைய ஆன்மீகம்

அவர் சிறுவயதில் இருந்தே நாள் பூசைகளைக் கூட தவறுவதில்லை. என்னையும் படுக்கையில் இருந்து அடித்து எழுப்பி பூசைக்கு அனுப்பி விட்டுத்தான் வருவார். இது அவரின் சொந்த தம்பியின் சான்று. சிறு வயதில் ஆரம்பித்த இந்த பூசை பக்தி அவரை இணைத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈற்றில் அவரின் இந்த பூசைப் பக்தி அவரை பூசை வைக்கின்ற குருவாக மாற்றியது. ஒரு முறை அவருடன் நீண்ட தூரம் ஒரு ஞாயிறு திருப்பலிக்காக சென்ற ஒருவர் அங்கே 8 பேர் மட்டும் நிற்பதைக் கண்டு, "இத்தனை பேருக்காகவும் இவ்வளவு தூரம் நீங்கள் ஏன் கஷ்டப்பட்டு வருகின்றீர்கள்?" என்று கேட்ட பொழுது அவர் கூறினாராம் "நான் ஒருவன் வராவிட்டால், இவ் 8 பேரும் கண்டப்பட்டு பங்கு ஆலயத்திற்கு அல்லவா வரவேண்டும், அல்லது பூசை இல்லாமல் அல்லவா இருக்க வேண்டும்." சறாவின் உருவாக்குணர்வில் ஒருவரான அருட்.தந்தை டேவிட் அடிகளார் தன்னுடைய இரங்கல் கடிதத்தில் குறிப்பிட்டு எழுதுகிறார். 'இவர் தன்னுடைய இறுதி 3 நாட்களையும் பதுங்கு குழிக்குள் களிக்க வேண்டிய சூழலில் அவருக்கு உண்ண உணவில்லையே என்ற வருத்தத்தை விட திருப்பலி ஒப்புக்கொடுக்க முடியவில்லையே என்ற வருத்தம் தான் அதிகமாக இருந்தது.

மேலும் இவருடைய ஆன்மீகத்தை நற்கருணை பக்தியும், அன்னை மரியாளின் செபமாலை பக்தியும் நிரப்பியிருந்தமையை இவர் கட்டிய சிற்றாலயங்கள் சான்று பகரும்.

### அவர் ஒரு நல்ல நண்பன்

இதற்கு 15 வருடங்கள் அவருடைய நெருங்கிய நண்பனாக இருக்க வாய்ப்பு கிட்டிய நானே சான்று பகருகின்றேன். அவருடைய நட்பில் நான் உண்மையான அன்பை சுவைத்தேன். இவருடைய தோழமை மிகவும் என்னைக் கவர்ந்தது. வன்னியில் இருந்து வருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்னைத் தேடி ஊர்காவற்றுறைக்கு வராமல் செல்ல மாட்டார். "உடுக்கையிழந்தவன் கை போலங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற திருவள்ளுவரின் வார்த்தைக்கு இணங்க துன்ப துயரங்களை, வேதனைகளை பகிர்ந்து வழிகாட்டும் தாயுள்ளம் படைத்த நல்ல நண்பனை இவரில் நான் கண்டேன்.

மேலும் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும், நட்பை மதித்து வேற்றுமையில் ஒற்றுமையை மதிக்கின்ற முதிர்ச்சி நிலையையும் இவரில் நான் அனுபவித்தேன். அத்துடன் இவர் எங்கெல்லாம் பணியாற்றினாரோ அங்கெல்லாம் இருந்தவர்களை தன் அன்புப் பணியால் நண்பர்களாக மாற்றி அவர்களுக்காக தன் உயிரையும் கொடுத்து, 'தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை' என்ற இயேசுவின் வார்த்தைகளை மெய்பித்தார்.

### அவருடைய துணிவும், தியாகமும் :

அவர் சிறுவனாக இருந்த பொழுது கிணற்று கட்டில் ஏறி ஒரு மரத்தின் பழத்தை பிடுங்க முற்பட்ட பொழுது அவரின் தாய் சொன்னாராம் 'சறாகுட்டி கீழே இறங்கு, விழுந்தால் செத்துவிடுவாயடா.' அதற்கு அவர் உடனே கீழே இறங்கி கேட்டாராம் 'அம்மா செத்தா என்னம்மா?' அன்றே அவர் சாவை சந்திக்க ஆயத்தமானார்.

நாங்கள் அருட்.சகோதரராக இருந்த போது ஒரு முறை சக்கோட்டைக்கு விடுமுறைக்காக சென்றிருந்தோம். வழக்கமாக விடுமுறையின் இறுதி நாளில் ஒருவர்மேல் ஒருவர் சேற்றுத் தண்ணீர் அடித்து குதுகலித்து இருப்போம். அந்த நாளில் யாராவது தண்ணீருடன் துரத்தினால் நாங்கள் ஓட்டம் பிடிப்போம். ஆனால் சறாவை பார்த்த போது அவர் மற்றவர்கள் தண்ணீருடன் வருவதைக் கண்டு கதிரை ஒன்றில் அமர்ந்தவாறு "ஊற்றத் தானே வந்தீர்கள் ஊற்றுங்கள்' என்று அமர்ந்து கொண்டார். அவர்களும் ஊற்றிச் சென்றார்கள். இவ்வாறு மற்றவர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சிக்காக எந்த கஸ்டத்தையும் தாங்க வல்லவராக காட்சியளித்தார்.

கிளரேசியன் சபையைச் சேர்ந்த அருட்.சகோ. யோசப் ஜெயசீலன் தன்னுடைய இரங்கல் கடிதத்தில் குறிப்பிடுகிறார் 'சுனாமி அகதிகளுக்கு உதவ முள்ளியவளையில் 25க்கும் அதிகமான அருட். சகோதரரும், குருக்களும் ஒரே ஒரு கிணற்றையும் ஒரே ஒரு மலசல கூடத்தையும் பயன்படுத்த வேண்டி இருந்தது. அந்நாட்களில் சறா நேரத்துடனே எழுந்து பாத்திரங்களில் கழுவுவதற்கும், சமைப்பதற்கும் தேவையான தண்ணீரை ஏறத்தாழ 75 அடி ஆழமான கிணற்றில் இருந்து ஊற்றி வைப்பார்' இப்படியாக மற்றவருக்காக தன் கஷ்டங்களை பாராமல் செயற்பட்டார்.

இவரின் இறுதிக் காலத்தில் இவருடன் நீண்ட நாட்கள் செலவு செய்த அருட். தந்தை இராஜசிங்கம் அடிகளார் கூறினார் சறா போரின் ஆரம்ப காலத்தில் ஷெல்லுகள் வந்து வீழ்ந்த வண்ணமாக இருக்கும் பொழுதும் கூட பதுங்கு குழிக்குள் தான் செல்லாமல் மற்றவர்களை கட்டாயப்படுத்தி அனுப்பி விட்டு தன் படுக்கையிலே அவர் இருப்பார். இவ்வாறு மற்றவர்களின் உயிரை மதித்து தன் உயிரை துட்சமென மதித்த மாவீரன்.

இவர் இவ்வுலகை விட்டு பிரிவதற்கு மூன்று வாரங்களுக்கு முன் இவருடன் தொலைபேசியில் ஏறத்தாள 45 நிமிடங்கள் கதைப்பதற்கு வாய்ப்பு கிட்டியது அப்பொழுது இவர் பேசிய வார்த்தைகள் பசுமரத்தில் ஆணி பாய்ந்தாற் போல் என் மனதில் பதிந்தன. தன்னுடைய கஷ்டங்கள் மத்தியிலும் பொதுவாக எல்லோரையும் அவர் சுகம் விசாரித்தார். அப்பொழுது நான் அவரிடம் கூறினேன் எல்லோருடைய ஆதங்கமும் நீங்கள் இங்கு வந்து சேர்வதே என்று. அப்பொழுது அவர் கூறினார் 'நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காய் உயிரையும் கொடுப்பார். ஆகவே நான் இறுதி ஆள் அங்கு இருக்கும் வரையும் நானும் இருப்பேன். என்னை வரும்படி கேட்பதாக இருந்தால் இனி ரெலிபோன் எடுக்க வேண்டாம்.' இவருடைய வார்த்தைகளைப் போலவே இறுதி ஆளாக அங்கு இருந்து புறப்பட்டு தன் உயிரையும் அர்ப்பணித்து தியாகப் பலியானார்.

Sara opted to be a martyr and God accepted Him.

Sara is still living in the lives he lived and died for. So we have to make him live by living for the dying and ultimately dying for the living.

As our beloved late Holy Father Pope John Paul ii of venerable memory,wrote once for the Wold Day of Peace, 'There is no Peace without Justice, no Justice without Forgiveness' may his death inspire us to work only for Peace with Justice and Forgiveness.

அருட்பணி. மோ. ஷோபன் ரூபஸ்
(சறாவின் குரு நண்பன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் சறா,

உன்னை என்று விளித்து எழுத கை தயங்குகின்றது
வயதில் குறைந்தவனாயினும் அப்படி ஒரு அளுமை


உடல் பெரிதுதான்
உள்ளமும் அது போலவே.

இரக்க குணமும்
மதிப்பளித்து நடக்கும் பண்பும்
கடும் உழைப்பும்
உன்னுடன் உடன் பிறந்தவை.

“வன்னியில் இறுதி நபர்
இருக்கும் வரைக்கும்
தானும் இருப்பாராம்”
கேள்விப்பட்ட போது
நெஞ்சம் விம்மியது
பெருமையினால்.

குருத்துவத்தின் வரைவிலக்கணங்கள்
பலவற்றைப் படித்திருக்கின்றேன்
புத்தகங்களில்
ஆனால் வாழ்விலக்கணங்களை
உன் போன்றவர்களில்
அனுபவக்கின்றேன்
மேரி பஸ்ரியன்
லொறட்
ஜிம்பிறவுண்
பாக்கிய றஞ்சித்
கிளி
இவர்கள் வரிசையில்
சறா இன்று நீயும்.

எதையும் தாங்கும் இதயம் மட்டும்
உன்னிடம் இருந்திருந்தால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீ எப்போதோ வெளியேறியிருப்பாய்
எத்தனையோ வேண்டுகோள்கள்
உன்னை வெளியேறப் பணித்தபோதும்
உன்னைச் சார்ந்த மக்களை
வெளியேற்ற மறுத்தது உன் இதயம்
அதனால் தானே அது நின்று போனது

சுமை தாங்கும் இதயத்தை பெற்றிருந்தாய்
நண்பா
எம் இதயங்களில் வாழ்கின்றாய்.

உன் தலை அடிக்கடி அசைவதை
அதிசயமாய் பார்த்ததுண்டு
அது இறைசித்தத்திற்கு
எப்போதும் ஆமென அசைந்ததை
இப்போது புரிந்து கொள்கின்றேன்.

நண்பா
உனதும் உன்போன்றவரதும்
வாழ்வும் மரணமும்
துருவத்திடை ஒளிரும் வெள்ளி

காரிருளில் பயணிக்கும்
குருத்துவத்திற்கு திசைகாட்டி



உம் சுவடு பற்றி
மக்களுக்கான பணியாளராய்
மக்களோடு பயணிப்போம்

இறப்பால் இருப்பை உறுதிப்படுத்தியவனே
எமக்காய்
இறையருள் இறைஞ்சி நில்லும்

*அன்புடன்*
*ரவி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரா, திருத்தூதர் சுவடுகளில் நீயும்...!

(அருள்தந்தை சரத்ஜீவன் அடிகளின் அஸ்தியை யாழ்ப்பாணத்தில் 30.05.2009 அன்று நல்லடக்கம் செய்யுமுன் ஆயர் இல்லச் சிற்றாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியில் ஆற்றப்பெற்ற மறையுரையின் சாரம்.)

மிகப்பெரும் மனித அவலத்துக்குள் சிக்குண்ட வன்னி மக்களுக்குத் தமது இறுதி மூச்சு வரை ஓய்வு ஒழிச்சலின்றிப் பணிபுரிந்து உயிர் துறந்தவர், இறை அடியான் அருள் தந்தை சரத்ஜீவன் அடிகள். அவர் நம்மை விட்டுப் பிரிந்த இந்த 2009ம் ஆண்டானது, கிறிஸ்துவின் திருத்தூதரான பவுல் அடிகளின் ஆண்டாகவும் அமைகின்றது. புனித பவுலின் வார்த்தைகளை வேதாகமத்தில் நாம் வாசிக்கும் போது, சரத்ஜீவன் அடிகளும் தமது பணி வாழ்விலும், இன்னும் குறிப்பாகத் தமது இறுதிப் பணி நாட்களிலும் அதே மனநிலையையும் அதே பணி ஆர்வத்தையும் கொண்டிருந்திருப்பார் என்று எண்ணத் தோன்றுகின்றது.

இயேசுவை ஆண்டவராக அறிய வந்ததுமுதல் புனித பவுல் தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டவராக உயர் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்தார். தமக்கென வாழாது பிறர்கென வாழ்ந்தார். பசி நோக்காது கண் துஞ்சாது உழைத்தார். கிறிஸ்துவைப் பற்றி மக்களுக்கு இடையறாது நற்செய்தி அறிவித்தார். கிறிஸ்துவின் பெயரால் மக்களின் பிணக்குகளைத் தீர்க்கவும் வறுமையைப் போக்கவும் முயற்சிகள் செய்தார். இவற்றால் பல்வேறு பிரதேசங்களையும் நாடுகளையும் சேர்ந்த மக்களைக் கடவுளிடம் அழைத்து வந்தார். கிறிஸ்துவின் அன்பிலிருந்து எதுவும் அவரைப் பிரிக்க முடியவில்லை.

நமது வன்னிப் பிரதேசத்தை நோக்குவோமாயின், மோதலில் ஈடுபட்டோரின் ஈவிரக்கமற்ற செயற்பாடுகளின் நெருக்கடிக்குள் அகப்பட்டுக் கொண்ட மக்கள் கொடூரமான எறிகணை வீச்சுக்களால் உயிரிழந்தனர்; காயமுற்றனர்; உடல் உறுப்புக்களை இழந்தனர்; வாழ்வா சாவா என்ற நெஞ்சைப் பிளக்கும் ஏக்கத்தால் நெருக்குண்டனர்; தங்கள் பசி தீர்க்க உணவேதும் கிடைக்காமல் பட்டினி கிடைத்தனர்; உள்ளதெல்லாம் கைவிட்டு அகதிகளாய் ஓடியதால், மாற்று உடைகூட இன்றிப் பரிதவித்தனர். இந்த மக்களுக்குப் பணிபுரியவென்று அனுப்பப்பட்டிருந்த அருள் தந்தை சரத்ஜீவனும் மக்களின் இந்தத் துன்பங்கள் அனைத்தையும் தமது தலை மேலும் ஏற்றுக்கொண்டனர். ஆயினும் துன்பத்தால் துவண்டு போய்விடாமல், சளைக்காது இறந்தோரை அடக்கஞ் செய்தார்; காயப்பட்டோருக்குச் சொற்பமேனும் மருத்துவ உதவி கிடைக்கச் செய்தார்; தமக்குத் கிடைத்த அற்ப உணவையும் இல்லாதோரோடு பகிர்ந்து கொண்டார். எப்படி அவரால் முடிந்தது? காரணம், அவரை உந்தித் தள்ளிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிறிஸ்துவின் அன்பே. எனவே அவர் பவுல் அடியாரோடு சேர்ந்து இவ்வாறு சொல்லக் கூடியதாய் இருந்தது: "கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக்கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்?... ஏனெனில் சாவோ, வாழ்வோ... நிகழ்வனவோ, வருவனவோ... வேறெந்தப் படைப்போ நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது என்பது என் உறுதியான நம்பிக்கை" (உரோ 8:35-39).

ஆதித் திருச்சபையிலே தூய ஆவியாரின் கொடைகளைப் புனித பவுல் நிறைவாகப் பெற்றிருந்தார்: ஞானம், புத்தி, அறிவு, திடம், விமரிசம், பக்தி, தேவபயம் என்ற இக்கொடைகளைப் பவுல் அடியார் பெற்றுக் கொண்டதும் அல்லாமல், தமது பணியிலே அவற்றைச் சிறப்புடன் பயன்படுத்தவும் தவறவில்லை. நமது சரத்ஜீவன் அடிகளும் தூய ஆவியார் தமக்கு அளித்த கொடைகளை நிறைவாக அனுபவித்தார்; இன்னலுற்ற மக்களுக்கான தமது பணியில் அவர் அக்கொடைகளைப் பிரயோகித்து, பலன் பலவும் விளையச் செய்தார்.

குறிப்பாகச் சொல்லப் புகுந்தால், 'திடம்' அல்லது துணிவு அல்லது உறுதிப்பாடு எனும் ஆவியாரின் கொடைதான், மரண பயத்தின் மத்தியிலும் துன்புற்றோருக்குத் துணிவுடன் பணிபுரிய அவரைத் திடப்படுத்தியது. மேலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விமரிசம்' எனும் ஆவியாரின் கொடையானது சிக்கலான சூழ்நிலைகளைச் சீர்தூக்கி எடை போடவும், அதன் மூலம் தகுந்த முடிவுகளை எடுக்கவும் துணைபுரியும் என்று படித்திருக்கின்றோம். இந்தக் காலகட்டத்தில் சரா அடிகளுக்கு இக்கொடை நிறையவே தேவைப்பட்டது.

சில வாரங்களுக்கு முன்னதாக நமது செவிகளில், "சரா அடிகளுடைய உருத்திரபுரப் பங்குமக்கள்தான் முழுமையாக இடம்பெயர்ந்து விட்டார்களே! இன்னமும் அவர் ஏன் வன்னியிலேயே தங்கியிருக்கிறார்? இந்தப் பக்கம் வந்துவிடலாமே" என்ற விமர்சனங்களும் விழத்தான் செய்தன. ஆனாலும் இவரது இரங்கல் திருப்பலியில் யாழ்ப்பாண ஆயர் அவர்கள் ஆற்றிய மறையுரையிலேயே இதற்கான பதிலும் துலங்கியது. சரா அடிகள் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டிருந்த பணிகளுக்கு மேலதிகமாக, இயேசு சபையினரின் அகதிகள் சேவை (JRS) நிறுவனத்திற்குக் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளராக அவர் பணி புரிவாரா என்று ஆயர் அவர்கள் கேட்ட போது, "நீங்கள் கேட்டுக் கொண்டதால் அதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று அருள் தந்தை சரத்ஜீவன் சொன்னதாக ஆயர் பகர்ந்தார். நாள் தோறும் மோசமடைந்து கொண்டிருந்த அந்த அவலச் சூழ்நிலையிலே, இன்று இங்கு நான் செய்யவேண்டியது என்ன என்று முடிவெடுத்துச் செயல்படுவதற்கு விமரிசம் என்ற கொடை, சரா அடிகளுக்கு நிச்சயம் துணை புரிந்திருக்கும். அதனால் தான் போலும் அவர், தமது பொறுப்பின் கனாகனத்தை உணர்ந்தவராக, "அகதி மக்கள் வன்னியில் இருக்குமளவும் நானும் இங்கேயே இருப்பேன்" என்று தெளிவுறக் கூறி, கருமமே கண்ணாய்ப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

சரத்ஜீவன் அடிகளார் பட்ட பாடுகள் போதும், செய்த இரக்கச் செயல்கள் போதும் என்று இறைவன் நினைத்தாரோ என்னவோ, வன்னி மக்களின் ஒரு பெருங்கண்டம் முடிவுற்று, 18.05.2009 அன்று முள்ளிவாய்க்காலில் இருந்து மக்கள் வெளியேறிய போது, இறுதியாக மற்றக் குருக்களோடு அவர் வந்துகொண்டிருந்த வேளை மாரடைப்பு ஏற்பட, இறைவன் அவரைத் தம்மிடம் அழைத்துக் கொண்டார். "நான் பசியாய் இருந்தேன், உணவு தந்தாய்; நான் குற்றுயிராக் கிடந்தேன், என்னைத் தூக்கியெடுத்தாய்; சின்னஞ் சிறிய என் சகோதரர்களுக்கு நீ செய்ததையெல்லாம் எனக்கே செய்தாய்" என்று கூறி, இறைவன் தனது ஆனந்தத்தில் சங்கமமாகிட சரத்ஜீவனைக் கூட்டிச் சென்றுவிட்டார். சரா, நீ கிறிஸ்துவின் சிறந்த சீடனாய் வாழ்ந்து சென்றுள்ளாய். சீடத்துவத்தின் சிறப்புக்காய் இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

*அருள் தந்தை ஜெராட் சவரிமுத்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் ஆபத்தான எல்லைக்குச் சென்ற ஒரு மனிதம்

உலகில் இருப்புக்கொள்ளும் உயர் ஆன்மீகங்கள் அல்லது ஆன்மீக தத்துவங்கள் வரையறுக்கப்பட்ட யுகத்தின் வரலாற்று நகர்வுகளுடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. சில வரலாற்று நிகழ்வுகள் ஆன்மீகத்தின் அடிநாதமாக அமைந்துள்ளது. ஆன்மீகத்தை உருவாக்கியும் உள்ளது என்றும் கூறலாம். கிறீஸ்தவத்தின் மூலவிசையான யூத ஆன்மீகம் இசுரவேல் மக்களின் எகிப்திய அடிமைத்தன வரலாற்று நிகழ்விலிருந்து உருவாகியது என்பது மறைக்க முடியாதது.

1950களில் கொல்கத்தா நகரின் சேரி வாழ்வு, தெருவோரங்களில் காட்சி அளித்த மனித எலும்புக் கூடுகள், தொழுநோயின் அவலங்கள் அன்னை திரேசாளின் துறவறவாழ்வில் புதிய பார்வையைக் கொணர்ந்தது. அவளின் புரட்சியான எளிய வாழ்வுமுறைக்கு கொல்கத்தா வித்திட்டது. அன்னை திரேசாளின் மகளீர் துறவறஅவை பன்னாடுகள் எங்கும் பாரிய வளர்ச்சிக்கு காரணம் கொல்கத்தாவின் தெருவோரங்கள் கொடுத்த களம்.

ஆன்மீகம் அந்தரத்திலோ, அல்லது ஆவியலோ மட்டும் வளரமுடியாது அதற்குத் தளம் தேவை, அதற்கு உடல் தேவை. இறைவனுடைய வார்த்தைக்கு மரியாள் தளம் ஆகினாள். கிறித்துவின் மனுவுரு, மானிடயேற்பு தொடரப்படவேண்டியது..

### களம் அமைத்த வன்னி



இப்பின்புலத்தில் நோக்கின் வன்னிக்கு காலடி வைத்த நாளன்றே தனது ஆன்மீகத்தை அடிகளார் சரத் ஜீவன் மண்ணோடும் அம்மக்களின் ஆதங்கங்கள், எதிர்பார்ப்புக் கள், அபிலாசைகள், வாழ்வியல் போராட்டங்களுடன் தன்னை இணைத்துக்கொண்டார். அதன்வழி தன்ஆன் மீகத்தை தேர்ந்தெடுத்து நெறிப்படுத்திச்சென்றார். அங்கே புதிய ஆன்மீகம் தேவையென்று உணர்ந்தார். மக்கள் விடுதலை விலைஉயர்ந்தது, குருதிசிந்தும் மக்களோடு தனது குருதியை சிந்த வேண்டும் என்று தலைவர் கிறிஸ் துவின் சிலுவைபாதைக்கு இழுத்துசெல்லப்பட்டார், கவரப்பட்டார். மக்களுக்கு விடுதலை எதிர்நோக்கை கொடுத்தார். மக்கள் குறுகிய எல்லைக்குள் முடக்கப் பட்டதும் வான் செல் தாக்குதலினால் தாக்கப்பட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும் 500க்கு அதிக மக்கள் சிதறுண்டு இறந்த நிலையில் அடக்கம் செய்வதும் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்வதும் இறுதிவரையும் மக்களோடு இருப்பேன் என்ற துணிச்சல் அவருக்கு புதிய ஆன்மீக களத்தை தோற்றுவித்தது. இவ்விடுதலை எட்டியது எட்டவில்லை என்பதல்ல விவாதம், இவ்எதிர்நோக்கின் மையத்தில் வாழ்வின் உயர் மதிப்பீடுகளை சகிக்கமுடியாத துன்பியல் போராட்டத்தில் வாழ்ந்தார். மக்களோடு இருப்புக்கொண்டு எளிமை வாழ்வின் உச்சத்திற்கு சென்றார். பூரண வெறுமையாக்கலுக்கு தன்னை உட்படுத்தி இறுதி மூச்சுவரை ஆன்மீகக் களத்தில் போராடினார். போல்அடிகளின் வார்த்தையில்: "இன்னல்கள்.. எங்களை அளவுக்கு மிஞ்சி வாட்டின, எங்களால் தாங்க முடியாத சுமையாக மாறின. இனிப் பிழைப்போம் என்ற நம்பிக்கை இல்லாமற் போயிற்று. எங்களுக்கு மரணதண்டனையே விதிக்கப்பட்டது என்ற உணர்வு ஏற்பட்டது." (2கொரி1.8)

மறைசாட்சியக் களம்

கத்தோலிக்க திருஅவையில் இறைநம்பிக்கைக்காக தம் இன்னுயிரை ஈந்தவர்களை மறை சாட்சிகள் என்று அறிக்கையிடுகின்றோம். மறைசாட்சி யத்துக்கு இரத்தம் சிந்தும் நிலை இருக்கவேண்டும் என்பர். அடிகளார் சரத்ஜீவனின் வாழ்வும் அவரது இறுதி பிரிவும் மறைசாட்சிய அம்சங்களைக் கொண்டது. உக்கிரமான போரில் தண்ணீர் எடுக்கவும் சமைக்கவும் பதுங்குழி களை விட்டு வெளியேற முடியவில்லை. தொடர்ந்து பல நாட்கள் உணவு, நீர் இன்மையினால் உயிர் அணுக்கள் படிப்படியாக தனது செயலூக்கத்தை இழந்து கொண்டது. இக்குருதி சிந்தல் வெளிப்படையாகத் தோன்றாவிட்டாலும் இதை 'வெண் வன்செயல்' என்கிறார் ஆயர் கெல்ட கமெறா, அதாவது அநீத அமைப்புகளினால் உருவாகும் பட்டினிச்சாவு இரத்த உயிர் அணுக்கள் உருவாகத் தடையாகி உயிர் இழக்கத் தூண்டுகிறது. அருட்பணி ஜேம்ஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திநாதர் கூறுகிறார்: உழவூர்தியில் தம்மோடு இருந்தவர்களை இரட்டை வாய்க்காலுக்கு எடுத்து செல்கையில் காயப்பட்டவர்களிற்கு இடம் கொடுப்பதற்காக தான் நடந்து சென்றார். இருதடவைகள் மயங்கினார் உணவின்மையும், உடம்பின் நீரற்ற தன்மையும் அவரது உயிரைப் பறித்தது.

"தமிழர்களுக்கு எதிராக நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதலின் வாயிலாகவும், அவர்களைப் பட்டினி போட்டுக் கொல்வதன் மூலமும், நோயை ஏற்படுத்தும் சூழலை உருவாக்கியும் .அளவிற்கு அதிகமான மக்களை முகாம்களில் முடக்கி வைத்து அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை தேவைகளை போதுமான அளவிற்கு அளிக்காமலும் ஒரு திட்டமிட்ட இனப்படு கொலையை இலங்கை அரசு நடத்தியுள்ளது." என்கிறார் அமெரிக்க பேராசியர் போய்ல்

குடும்பத்தளம்

"இதெல்லாம் இவருக்கு எங்கிருந்து வந்தது?" என்ற கேள்வி நற்செய்தி ஏட்டில் கேட்ட நினைவு.

தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்., என்பதற்கு அமைய அடிகள் சரத் ஜீவனின் முன் உதாரணமான வாழ்விற்கு அடித்தளம் அவரது பெற்றோர்கள், குடும்ப உறவுகள். பெற்றோர்கள் இருவரும் சிறந்த ஆசிரியர்களாக கத்தோலிக்க ஆசிரிய முகாமைத்துவத்தின் கீழ் தங்கள் பணியை தொடக்கினவர்கள். எளிமை, கடமை உணர்வு, சான்றாண்மை போன்ற நற்பண்புகள் அவர்களில் குடிகொண்டிருந்தது. ஆசிரிய கலாசாலையிலும் ஆசிரிய பணித்தளத்திலும் பெற்ற அறிவு கத்தோலிக்க மானிட விழுமியங்களை தாமும் உள்வாங்கி பாடசாலை பிள்ளைகளுக்கு மட்டுமல்ல தம் பிள்ளைகளுக்கும் ஊட்டி வந்தார்கள். தாய் ஒரு புரட்சிப்பெண், மாற்றுச்சிந்தனைகளை வரவேற்பவர். அர்த்தமற்ற கலாச்சார தடையங்களை கடந்து, வரட்டுக் கௌரவங்களை உடைத்து சகோதரத்துவ சமத்துவ மதிப்பீடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து வாழ்ந்ததற்கு அவர் ஒரு முன்உதாரணம். அவருடைய புரட்சி சிந்தனையும், பக்க சார்பற்ற போக்கும், வறியவர்கள் பற்றும் அடிகளாரின் வாழ்வுக்கு மிகவும் கைகொடுத்துள்ளதை மறுக்க முடியாது.

தமிழரை ஒடுக்கு முறை தொடங்கியதும் அதற்கு எதிரான அகிம்சை போராட்டங்களில் அவர் துணிவுடன் பங்குபற்றியதும், ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக தாகித்ததும் அடிகளாருக்கு விடுதலைக்கான இலட்சிய


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேட்கையினை கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அடிகளாரின் அடக்கநாள் கையேட்டில் ஜெறிஹரன் எழுதுகிறார் "உன்னுடைய வாழ்க்கையிலே வெற்றிக்கு வித்திட்டவர் யார்? உன்னுடைய குடும்பம் தான் என்று உறுதியாக சொன்னால் அதில் தவறிருக்காது. அமரத்துவமடைந்த உன்னுடைய அப்பா, அன்புள்ளம் கொண்ட அம்மா, பாசம் நிறைந்த உன்னுடைய சகோதரர்கள், சகோதரிகள், நீ மனிதனாக வாழ்வதற்கும், இறை பணியாளனாக மலர்வதற்கும் கற்றுத்தந்தவர்கள், களம் அமைத்துத் தந்தவர்கள், உன் முன்னிலையிலும் உன் குடும்ப உறவுகள் முன்னிலையிலும் நன்றியோடு பணிகின்றோம்."

## அரசியல்தள ஆன்மீகம்

கிறிஸ்தவ ஆன்மீகம் அல்லது அருள்வாழ்வியத்தின் மூலவேர் இறைவனுடைய திட்டத்திற்கு இசைவாக்கம் செய்வது. இது ஆளுக்கு ஆள் வேறுபடலாம், ஆனால் அரசியல் அருள்வாழ்வியம் இறைத்திட்டத்தை வரலாற்றின் நிகழ்வுகளில் நிறைவாக உய்துணர்தல். இறைவனின் திட்டம் அனைவரும் குறிப்பாக பெரும்பான்மையான ஏழைகள், அநீத அமைப்புகளால் ஒடுக்கப்பட்டவர்கள் வாழ்வை அடைதல் ஆகும். "அவர்கள் வீடு கட்டி குடியிருப்பார்கள்: திராட்சை நட்டு அதன் கனிகளை உண்பார்கள." (எசாயா:65.21) எதிர் மறையாக நோக்கின் வறுமை, அடக்குமுறையினால், அகப்பட்டுள்ள கோடிக்கணக்கான மக்களின் அடிமைத்தனங்கள் முடிவுக்கு வரவேண்டும். மனித மாண்பை தொடர்ச்சியாகச் சூறையாடுதல், உரிமைகளைக் களவாடல், கொத்தாக மக்களை கொலைசெய்தல், சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேற்றல், சித்திரவதைகள் என்பன உயிரின் மதிப்பை இழக்கச்செய்கிறது, மானிடத்தை இழிவுபடுத்துகிறது. "இறைவன் கொடுத்த பெருங்கொடையாகிய உயிரை பாதுகாப்பது நாம் செய்யக்கூடிய சிறிய செயல்" என்கிறார் பேராயர் றொமேறோ. இறைவனின் படைப்பு சிதைக்கப் படுகிறது அதன் நோக்கம் பிறள்வுக்குள்ளாகிறது என்பதை ஒடுக்கப்பட்ட வர்களின் இருப்பு தெளிவுபடுத்துகிறது.

இறுதிக்குடிமகன் பாதுகாப்பாக வெளியேறும்வரை நானிருப்பேன் என்று குரல் கொடுத்தவர். இவ்உலகில் ஒடுக்கப்பட்ட இறுதி மனிதனுக்கு விடுதலை கிட்டும்வரை சரத்ஜீவனின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும்!

*அ பி யெயசேகாம*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரலாபம்

விருத்தம்

## அன்புத்தாய்

அரிய பாலூட்டி தாலாட்டி வளர்த்தெந்தன்
இருதயம் புண்படுதே சதிவருமென் அறியேன்யான்!
ஆனந்தம் சேரென்மகனே இன்பமுடன் ஆங்கு
துயருறும் மக்கட்கு துன்பம் தீர்க்கவென்று
தித்திக்கும் திராட்சைத் தோட்டம் திருஅவை பணிசெய்தாய்
எத்திக்கும் யெஸ்தமெனி வன்னியது அறியேன்யான்
முற்றந் தோன்று முழுநிலவின்
முகத்தை யினிநாம் காண்பதெப்போ?

தன்நிகரில்லா மகனே தவிக்கிறேன் யான்
தரணியிலே தயவுகாட்ட எனக்கோ தாதியில்லை!
கட்டியணைக்க வில்லை கன்னமதை வருடவில்லை
பட்டதெல்லாம் சொல்லி பரிதவிக்க யாருமில்லை!
மட்டடங்கா கண்ணீரை சொரிய நீயுமில்லை
நிர்க்கதியாய் நிற்கின்றேன் நினைவலைகள் வருத்துதடா.
என்னுடலை அடக்க வருவாயென நினைக்கையிலே
உன்னுடலை அடக்க நானிருக்க நினைக்கவில்லை!

## அன்புச்சகோதரர்கள்

குண்டும் ஷெல்லுங் கொடுமை செய்யக்
கோயில் தோறும் ஓடோடி
மண்டும் பெரிய கஷ்டமுற்றும்
மனது கோணா மாதரசன்!
அன்று இறைவன் அடி சேர்ந்த
இன்னாச் சேதி இதய மதைக்
கொன்று தின்னு தையையோ!
காணக் கொடுத்து வைக்கலையே.

*- யூட் சூரியஜீவன்*

முத்திக்கு வித்திட்டீர் முரிம னத்தின்
மூவாத ஆறுதலாய் துயன்று ழைத்தீர்!
மத்திக்கும் வெண்டயிர்போற் கலங்கி னாலும்
மாயேசு சாந்திதர வேண்டி னேனே!
வடிதேற லமுதமொழி தானுங் கேளா
மருந்துபால் வார்க்காத பாவி யானேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருந்த கோயில்தனை யெந்நாட் காண்பேன
குழைகின்றேன் உன்னை என்றும் ஏங்கி ஏங்கி
*- மரீனா சகாயநிலா*

கண்ணியநற் கடமையொடு கட்டுப் பாடு
கைதேர்ந்த உன்வாழ்வில் கனிவாய்ப் பெற்றுப்
அன்பின் இருப்பிடமாய் வளர்ந்தோம் நாங்கள்
துன்பம் ஆட்கொண்டு பிரிந்தது நாமேதோ
எண்ணியெண்ணிச் செய்தவைகள் கோடி ஆனால்
எண்ணாமல் செய்தவைகள் இன்னுங் கோடி
கண்ணிலினிக் காண்ப தெப் போ? நிழல ளித்த
கற்பகமே சரிந்ததென் தவக்கு ருவே.
*- மடோனா கார்மேல் நித்திலா*

அண்ணா அண்ணாவென்று அன்புடனே அழைத்திடுவேன்
அடுத்துவரும் பயணத்தில் அண்ணாவைக் காத்திருப்பேன்
உன்னிழப்பின் செய்திகேட்டு உருக்குலைந்து நிற்கிறேன் யான்
உடன்பிறப்பின் உயிரிழப்பு உதிரத்தை பெருக்குதையா!
அற்றம் பார்த்து செய்யுதவி
ஐயோ வார்த்தைக் கடங்காதே
ஆனிமாதம் முதன்நன்மை கொண்டாட்டம் காத்திருந்தேன்
வன்னியிலே உன்சேவை வைகாசி முடிந்ததுவே.
*- யூட்சன் சக்திஜீவன்*

## பெறாமக்கள்


யேசு பரனார் திருச் சிலுவைச்
சின்னம் போட்டுக் காட்டினவர்
ஆசை யோடு கரம்பற்றி
அகரம் எழுதிக் காட்டினவர்
ஆல யத்தின் மணிகேட்க
அன்பி னோடே திருப்பலிக்குக்
காலைவேளை கூட்டினவர்
கருணை நிறைந்த எம்சித்தா
அழுகை கண்டால் எமையாற்ற
அணைக்குங் கரங்கள் நீட்டினவர்
என்ன கஷ்டப் பட்டாலும்
எங்கள் சுகமே தன்சுகமாய்
என்றும் வாழ்ந்த சித்தப்பா
இறைவ னெடுத்தால் என்செய்வோம்!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Print by: JS Graphics 077 7446973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் உன்னைப் புடமிட்டேன் ஆனால் வெள்ளியைப் போலல்ல துன்பம் எனும் உலை வழியாய் உனைத் தேர்ந்தெடுத்தேன். (எசாயா 48:10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org